DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. **CC 377/2025** | | |
| Deposition of Witness for | PW 1<br>Prosecution<br>Court | | |
| Name | : **திரு. இளங்கோ** | Taluk | : தலைவாசல் |
| Father/Husband Name | : **திரு**. ரங்கன் | Calling | : தலைமைக்காவலர் |
| Village | : வீரகனுார் காவல் நிலையம் | Age | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act** 44 **of** 1969) **on the** 22.10.2025.

**எதிரி ஆஜர் இல்லை. மனு BNSS** 355 **சமர்பிக்கப்பட்டது , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

**துவக்க நேரம்** 03.55

1) நான் தற்சமயம் வீரகனுார் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.05.2025 அன்று வீரகனுார் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். அப்பொழுது காவல் உதவி ஆய்வாளர் திரு.தினேஷ்குமார் என்பவர் தலைமையில், மதுவிலக்கு சம்மந்தமாக நானும், முதல்நிலைக்காவலர் திரு.சுப்ரமணி என்பவருடன் வீரகனுார் காவல் நிலைய சரகம் வெள்ளையூர் ஒட்டர் தெருவில் கண்காணித்து சென்றோம்.

2) அப்பொழுது, அங்கு சாக்கில் ஏதோ ஒன்றை எடுத்துபோட்டுக்கொண்டிருந்த ஒரு நபர் போலிசாராகிய எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை சுற்றி வளைத்து பிடித்து, அவர் வைத்திருந்த ஒரு வெள்ளை உரசாக்குபையை சோதனை செய்தபோது,

Monitor brandy – 180 ml அளவுகொண்ட 5 கண்ணாடி பாட்டில்களில் பிராந்தி இருந்தது. அவரை காவல் உதவி ஆய்வாளர் விசாரித்த போது அந்த நபர் தனது பெயர் முருகேசன், வயது 55, அப்பா பெயர் செல்லமுத்து என்றும், மேலும் முகவரியை கூறினார். ஆஜர் எதிரிதான்.

3) மேலும், எதிரி அரசு மதுபானக்கடையில் இருந்து அதிக லாபத்திற்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறி, தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல் உதவி ஆய்வாளர் கைதுக்கான காரணத்தை கூறி, கைது செய்து, அவரை காவல் படுத்தி, தடயங்களை கைப்பற்றி, எங்கள் முன்னிலையில் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.சுப்ரமணி என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) மேற்படி கைப்பற்றப்பட்ட பிராந்தி பாட்டில்களை உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் காவல் உதவி ஆய்வாளர், எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே கீழே கொட்டி அழித்தும், பாட்டில்களை உடைத்தும் அழித்தல் மகஜர் தயார் செய்தார். அழித்தல் மகஜரில் நானும், முதல்நிலைக்காவலர் திரு.சுப்ரமணி சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **(அழித்தல் மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5) பிறகு எதிரியை நிலையம் அழைத்து வந்து, எதிரியின் மீது வழக்கு பதிவு செய்ய, காவல் உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) எதிரி சாக்குபையில் பிராந்தி பாட்டில்களை வைத்திருந்ததாக சொல்லும்பட்சத்தில், சாக்குபையை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும், கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்படவில்லலை என்றாலும் சரிதான்.நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதாக சொல்லும்பட்சத்தில், ஏதேனும் தகவல் கிடைத்து சென்றோமா அல்லது நாங்களாக சென்றோமா என்றால் நாங்களாகதான் சென்றோம்.

2) நான் ரோந்து போனதாக சொல்லும்பட்சத்தில், அதனை GD ல் குறிப்பிட்டு, சென்றோமா என்றால் குறிப்பிட்டுதான் சென்றோம்.நான் ரோந்து சென்றதாக சொல்லும் பகுதியில் மக்கள் நடமாட்டம் இருக்கும் இடம்தான் என்றால் சரிதான்.

3) இவ்வழக்கில் தனிநபர் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவயிடத்திலேயே மதுபானத்தை கொட்டி அழித்து, அழித்தல் மகஜர் தயார் செய்ததாக சொல்லும்பட்சத்தில், அதற்கான புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

4) கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டதாக சொல்லும்பட்சத்தில், அந்த கையெழுத்தினை சம்பவயிடத்தில் வைத்து, போடப்பட்ட கையெழுத்தா என்றால் காவல் நிலையத்தில் வைத்து, கையெழுத்து செய்தேன்.

5) எதிரி மது விற்றதாக சொல்லுவது பொய் என்றாலும், நாங்கள் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக ஒரு வழக்கை எதிரிக்கு எதிராக காவல் உதவி ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**முடிவு நேரம்** 04.02

Taken Down by me in Open Court Read over
to the depondant in the presence of the accused
and admitted by the deponant to be correct

Judicial Magistrate No.1,
Attur.